575

இந்திய கத்தோலிக் சத்யாபிமான சபை
(தமிழ்ப் பகுதி.)

வேதம் என்னத்திற்கு?

BY

REV. J. JEGANATHER,
Diocese of Trichinopoly.

...ள்ளி, கன்ரேன்மென்ற்.

1919

: 1 அணு.

Q 62
N19
148076

திய கத்தோலிக் சத்யாபிமான சபை
(தமிழ்ப் பகுதி.)

தம் என்னத்திற்கு?

BY

Rev. J. JEGANATHER,

திருச்சினாப்பள்ளி, கன்றோன்மேன்ற்.

—

1919

விலை : 1 அணா.

Nihil obstat : T. Roche, S.J., cen. dep.

Imprimatur : + AUGUSTINUS, S.J., *Ep. Trichinopolit.*

377/230

13 AUG 1919

வேதம் என்னத்திற்கு?

ஓர் உவமானம்.

நாகரீகமும் செல்வாக்கும் சிறந்துள்ள தேசத்திலும் பிச்சைக்காரர்களுக்குக் குறைவில்லை. நம் இந்தியா தேசத்தில் ஏழைகள் வெகுபேர் உண்டு; சோம்பேறிகளுக்கும் குறைவில்லை என்கலாம். யாசகம் வாங்கி ஜீவனம் செய்வதைத் தொழிலாகக்கொண்ட சிலர் உண்டு. வேலை செய்யச் சக்தியில்லாததினால், அல்லது அங்கக் குறைவினால் வேலை செய்யக்கூடாத கைகால் நொண்டி, சப்பாணி, குருடர், பலவீனர்முதலான இவர்கள் உண்மையாகவே யாசகமின்றித் தங்கள் வாழ்நாட்களைக்கழிக்க முடியாது. இவர்களுக்கு அன்னமளித்து உதவிபுரிவது தர்மம் என்னப்படும். ஆனால், திடகாத்திரமும் தேக ஆரோக்கியமுமுள்ளவர்கள் பிச்சை எடுத்துத் திரிகிறதைக்கண்டால், இவர்கள்மீது இரக்கங்கொண்டு உதவிபுரிவது எளிதல்ல, அது தர்மமுமல்ல, ஏனெனில், "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்றிருக்கிறதல்லவோ? திடகாத்திரமும், வேலை செய்து பிழைக்க வலிமையுள்ளவர்களும் பிச்சை வாங்கத்தக்க பாத்திரங்கள் ஆகமாட்டார்கள். உழைத்துப்புசிக்கக் கூடுமாயினும், பிறரிடம் பிச்சை வாங்கிப் பிழைப்பவர்கள் சோம்பேறிகளேயாவர். "சோம்பித்திரியேல்" என்ற ஒளவையார் வாக்கை அவமதித்து நடக்கும் இவர்களுக்குப் பிச்சை கொடுத்து உதவுவது தர்மமாகாது. ஏனெனில், இன்னும் அதிகமதிகமாய் இவர்கள் சோம்பேறிகளாவதற்கு ஒத்தாசை செய்வதாகும். ஆகினும், இப்பேர்க்கொத்த போலி பிச்சைக்காரர் நமது தேசத்திலும் இருக்கிறார்கள். இவர்கள் ஊர் ஊராய்ச்சுற்றித் திரிந்து, அகப்பட்டதைப் புசித்து அயர்ந்து தூங்கிச் சோற்றுக்குச் செலவும், பூமிக்குப் பாரமுமாயிருக்கிறவர்கள். வேலை செய்வது என்றால், இவர்களுக்கு எட்டிக் காயைப்போல் தித்திக்கும். நாடோடிகளாய்த் திரியும் இவர்களை வரவழைத்து, இலகுவான ஒரு

தொழிலைக் கற்றுக்கொடுத்து, அத்தொழிலைக்கொண்டு தங்கள் ஜீவனாம்சத்தைத் தேடிக்கொள்ளும்படியாக நாம் பிரயத்தனப்பட்டாலும் இரண்டு மூன்று நாள் இருந்துவிட்டு, அப்புறம் பழையபடி பிச்சை வாங்கத்தான் ஓடிப்போவார்கள். சிவமதத்தானுடைய வீட்டில்போய் பிச்சை கேட்கும்போது, "ஹரா, ஹரா, சிவ, சிவா" என்பார்கள். கிறீஸ்துவர்களைக்கண்டால், "அர்ச்சியசிஷ்ட சிலுவை வரைந்து, சேசுநாதர்சுவாமிக்குத் தோஸ்திரம்! அம்மா, வேளாங்கண்ணியிலிருந்து வருகிறேன்; வேளாங்கண்ணி மாதாவைக்குறித்துக் கொஞ்சம் பிச்சைபோடு" என்பார்கள். இவர்களுக்கு வேதம் வயிறு; வயிற்றை நிரப்பவேண்டியதுதான், இவர்களுடைய வேதத்தின் கடமை. இத்தகையோர் கல்வி அறிவில்லாததினாலும், சோம்பலுக்கு இடம் கொடுத்த காரணத்தினாலும் இவ்விதமான அயோக்கியத்தனத்துக்கும், வேத உபேட்சைக்கும் ஆளானார்கள். ஆனால், கற்றோரிலும் பலர் இந்நாட்களில் வேதத்தின்மட்டில் யாதொரு கவலையின்றி, வேதம் உண்டோ இல்லையோவென்றுமுதலாய் அறியாமல் உபேட்சையாய் இருப்பதற்குக் காரணம் என்ன?

வேத அசமந்தர்.

வேத விஷயத்தில் சோம்பேறிகளும் அசமந்தரும் அநேகர் என்பது திண்ணம். இவர்களுடைய அசமந்தத்துக்குக் காரணம் யாது என்று சற்றே விசாரித்துப் பார்ப்போம். மேற்கூறிய சோம்பேறிகளான பிச்சைக்காரர் எத்தேசத்திலும், எக்காலத்திலும் உண்டு. அதுபோல், எக்காலத்திலும் வேத அசமந்தர் இருந்திருக்கிறார்கள். ஆனால், இக்காலத்தில்தான் வேத உபேட்சை பிரபல்லியமாகவும், அது ஓர் கோட்பாடாகவும் கொள்ளப்பட்டுவருகிறது. முற்காலங்களில், அவிசுவாசிகளும், தெய்வபக்தியில்லாதவர்களும் பலர் இருந்திருக்கிறார்கள். ஆனால், அவிசுவாசமும் தெய்வ பக்தியின்மையும், இக்காலத்தைப்போல் எக்காலத்திலாகிலும் இவ்வளவு அபரிமிதமாய்க் கற்றோரிடமும், கல்விப் பயிற்சியில்லாத பாமர ஜனங்கள் மத்தியிலும் காணப்பட்டதில்லை. இந்தியா ஜனங்கள், தெய்வ பக்தியும், வேதவைராக்கியமுமுள்ளவர் என்று பரம்பரை

யாய்ச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. மேல் நாட்டுப் பாஷைகளைக் கற்று, இலௌகீக நாகரீகத்தையும் செல்வாக்கையும் மிதமிஞ்சின விதமாய் முன்னேற்றி வரும் இப்போதோ, வேத விசுவாசமும் பற்றுதலும் எங்கும் தளர்ச்சியடைந்து வருகின்றன. இதற்கு ஒரு காரணம் என்னவெனில், அரசாட்சியார், "எந்த வேதத்தையும் விசேஷமாய் ஆதரிப்பதில்லை; பிரஜைகள் எந்த மார்க்கத்தையும் இஷ்டம்போல் அநுசரிக்கலாம்; அதற்கு இடையூறு செய்யமாட்டோம்" என்பதாகத் தாங்கள் கொடுத்த வாக்கை அநுசரிப்பதற்காகக் கலாசாலைகளில் வேத விஷயமானதொன்றும் கற்றுக் கொடுக்காததினால், சிறுபத்திலிருந்தே வேதப் பற்றுதல் க்ஷீணித்துப் போகிறது. இதனால், ஜனங்களுக்குள் ஓர்வித உபேட்சை ஏற்பட்டுவிட்டது. "படித்தவர்களுக்குப் பக்தியில்லை" என்ற பழமொழியும் சிலர் கூறிவிட்டார்கள். வேதம் உண்டா? உண்டுமானால், எது மெய்யான வேதம் என்று ஆராய்வதில்லை. வேதமும் இல்லை, உண்மையும் இல்லை என்றாற்போல் நடந்துவருகிறார்கள். எந்த வேதத்தையும் அநுசரித்தால் என்ன, அநுசரியாவிட்டால் என்ன? எந்த வேதமும் மோட்சம் கொடுப்பதில்லை. மனச்சாட்சிப்பிரகாரம் நடந்தால் போதும் என்பதாகச் சொல்லுகிறார்கள். இவர்கள் சொல்வது உண்மையாவென்று சோதிப்பதற்குமுன், இவ்விதமான வேத உபேட்சை எற்படுவது எவ்விதமென்று பார்ப்போம்.

வேத அசமந்தரில், பல வகுப்பினர் உண்டு. ஒரு சிலர், கடவுள் மட்டில் நமக்கு யாதொரு கடமையுமில்லை என்பதாகப் பிதற்றுகிறார்கள். இவர்களுக்கு மெய்யான வேதம் ஒன்றுமில்லை; ஏனெனில், கடவுள் மட்டில் நமக்குள்ள கடமைகளை வெளியரங்கமாய்க் காட்டுவதே வேதம் என்னப்படும். வேறு சிலர் சொல்வது "என்ன! எது உண்மையாயிருந்தால், நமக்குத்தாவிளை. எல்லாம் சரிதான்; இதுதான் உண்மையென்று கண்டுபிடித்துவிட்டால், வயிறு நிறைந்து விடுமா, என் குடும்பம் க்ஷேமம் அடைந்துபோமா? என்னைப் பிறர் அதற்காக மதிக்கப்போகிறார்களா?" என்பார்கள். இன்னும் வேறுசிலர், மனிதனுக்கு வேதத்தால் துன்பமும் இம்சையுந்தான் என்று முதலாய் வாய் கூசாமல் பகருகிறார்கள். கடைசியாய், மெய்யான வேதம் ஒன்று உண்டு என்றும், அந்த மெய்யான வேதம்

யாது என்பதாகவும் நம்மால் அறியவே முடியாது என்று வேற நேகர் புகல் சொல்வார்கள். இவ்விதமான சாக்குப்போக்குகளைச் சொல்லிக்கொண்டு, ஒன்றும் நிச்சயமில்லாததினால் "வேதம், கடமை" என்று ஏன் அங்கலாய்க்கவேண்டும்? இந்த உலகத்தில் இருக்குமட்டும் க்ஷேமமாய் இருப்பதற்கான வழியைத் தேடுவோம். செத்தபிற்பாடு என்ன நடக்குமோ, யாருக்குத்தெரியும். அதைப் பற்றிக் கவலைப்படுவது வீண்" என்பதாக, இவ்வுலக சம்பத்தை அடைவதிலே மாத்திரம் கண்ணும் கருத்துமாயிருந்து, கடவுளைப் பற்றிய எண்ணமுதலாயில்லாமல் ஜீவித்து வருகிறார்கள். மேன் குலத்தார், கீழ்குலத்தார், கற்றோர், கல்லாதார், ஏழைகள், ஐசு வரியவான்கள், குடியானவன், உத்தியோகஸ்தன் முதலான சகல வகுப்புகளிலும் இவ்விதமான வேத உபேட்சையுள்ளவர்களைக் காணலாம்.

பலவிதமான வேத அசமந்தம்.

வேத உபேட்சையும் ஒருவிதமாக அல்ல, பலவிதமாய் ஏற்படு கிறது. சாதாரணமாய், வேத அலட்சியம் செய்பவன் ஒன்றில் வேத அநுஷ்டானங்களைக் கவனியாத தாய் தந்தையரிடம் பிறந்த வனாயிருப்பான் அல்லது வேத உபேட்சை அநுமானிக்கப்படும் கலா சாலையில் படித்தவனாயிருப்பான். இவனுக்கு வேதம் நகைப்புக் குரிய ஒரு நாடகமாகத்தோன்றும். நீலக்கண்ணாடி வழியாய்ப் பார்ப்பதெல்லாம் நீலமாகத்தெரியுமல்லவா? புறங்குவிந்த அல்லது உட்குவிந்த கண்ணாடி வழியாய்ப் பார்ப்பது யாவும் ஏறுமாறாய்த் தோன்றும். அவ்வாறே, வேதமும் இவனுடைய தப்பெண்ணத் தால் தாறுமாறாய்த் தெரியும். இவனுடைய எண்ணம் தப்பிதமான தென்று ஆராய்ந்தறிவதற்கு, இவன் அதற்கான பிரயத்தனப்பட் டால் தான் ஆகும். பிரயத்தனத்துக்குப் பிரயாசை வேணும். பிரயாசைப்படப் பிரியமில்லை. ஏன்தான் ஆராய்ந்தறியப் பிரயாசைப் படப்போகிறான்? நல்ல சுகமாயிருக்குமளவும், இவனுடைய நிலை மையைப்பற்றி எள்ளளவும் சந்தேகிக்கிறதில்லை. இஷ்டம்போல் ஆசாரசங்களுக்குச் சம்மதித்து நடக்கிறான். மீளவும், ஆராய்ந்து பார்ப்பதற்கு நேரம் வேணும். எனக்கு நேரம் இல்லை என்பான்.

என் நேரம் இல்லை என்றுலோ, பகல் முழுவதும் சரீரப்பிரயாசை யான வேலை செய்து பணம் சம்பாதிப்பதில் காலம் கடந்து போகி றது. இரவில், நாடகம் கூத்துப்பார்ப்பதிலும், பாட்டுக்கச்சேரிகள் நடத்துவதிலும் நேரம் சென்று போகிறது. இப்படியாக, வேதத் தைப்பற்றி யோசிக்காமலே, முதிர்ந்த பிராயத்தில் பார்த்துக்கொள் ளலாம் என்று அசமந்தமாயிருந்து விடுகிறுன்.

இன்னேர் விதமாகவும் வேத உபேட்சை நேரிடக்கூடும். ஒரு வன் நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும், கெட்ட புஸ்த கங்களை வாசித்ததினுல் ஆசாபாசங்கள் கிளம்பி, துஷ்ட சிநேகிதர் கூட்டுறவால் சீர்குலைந்து போகிறுன். இவன ஆரம்பத்தில் பக்திக் குரிய விஷயங்களை அலட்சியம் செய்கிறுன்; மெள்ள மெள்ள, வேதத்தின் கடமைகளையும், அநுஷ்டானங்களையும் நிராகரித்து விடுகிறுன். இவ்விதம் செய்தாலும், மனச்சாட்சி அவனை வாதிக் காமல் விடுவதில்லை. மனக்குரங்கை மாற்றலரிதன்றே? மனக்குர லைத் தணிக்கும்படியாகவும், தன் நடத்தைக்கு ஏதோ நியாயம் சொல்லிக்கொள்ளும்படியாகவும், "ஆமா, தேவ திருவுளத்தை அறிய யாரால் கூடும்? உண்மை எது, அபத்தம் எதுவென்று மனி தன் கண்டுகொள்ளவேமுடியாது" என்பதாகப் பிதற்றுகிறுன். மனச்சாட்சியை மந்தப்படுத்துவதற்காக, அதற்கு விரோதமான ஆக்ஷேபனைகள் எங்கே அகப்படுமென்று தேடிப்பார்க்கிறுன். இப் படியாக உணர்ச்சியற்ற ஒருவிதமான நிலைமையை அடைகிறுன். பாவம், புண்ணியம் என்கிற வித்தியாசம் தோன்றுவதில்லை. கடை சியாக, ஏதோ பெருத்த நஷ்டம் அல்லது மனேவியாகுலம் நேர்ந் தால் மாத்திரம், இவனுக்குச் சிலவேளை யோசனை உண்டாகும்.

நுண்ணறிவும்புத்திக் கூர்மையுமுள்ள வேறுசிலர், சாஸ்திர சம் பந்தமாயுள்ள யாதாமொரு நூதனத்தைக்கண்டுபிடிப்பதில் இரவும் பகலும் தளர்ந்து உழைத்து வருகிறுர்கள். கடவுளைப்பற்றி அல் லது வேதத்தைப்பற்றி நினைப்பதும் கிடையாது. நெற்றி வியர்வை நிலத்திற்படப் பாடுபட்டு வேலைசெய்யும் தொழிலாளிகள் கூலியாட் கள் மத்தியிலும் வேத அசமந்தம் உண்டு. ஞானஸ்நானம் பெற்ற தைத் தவிர, கிறிஸ்துவனுக்குரிய வேறெந்தக்காரியமும் இவர்களி டம் காணக்கிடைக்காது. தங்களுடைய தரித்திரமும் நிர்ப்பந்த

முந்தான் இவர்களுக்கு ஏக கவலை. நாலு காசு எங்கே கிடைக்குமென்பதுதான் இவர்களுக்கு ஓயாத தேட்டம். உண்மையை அறிய விருப்பமுள்ளவர்களிலும் முதலாய் வேத உபேட்சையுள்ளோரைக் காண்கலாம். இதுஎப்படியெனில், சிலர் உண்மையை அறிய விரும்புகிறார்கள் வாஸ்தவம். ஆனால் அதை அறிவதற்கு ஏற்ற வழியை உபயோகிக்கிறதில்லை. ஆகையால் அதைக் கண்டுகொள்ளக் கூடாமல், என்ன பிரயோசனம் ஒன்றுமில்லை என்பதாக அசமந்தமாய் இருந்துவிடுகிறார்கள். இவர்கள் செய்யும் தப்பிதம் யாதென்றால், முதன்முதல் வேதம் போதிப்பது என்னவென்று அறிய ஆவல் கொள்ளாமல், வேதத்துக்கு விரோதமான ஆக்ஷேபனைகளைக் கற்றறிந்து, அவைகளுக்குச் சமாதானம் கூற முயற்சிக்கிறார்கள். இது தவறுதலான வழி என்பதற்குச் சந்தேகமில்லை. வேதம் கடவுளைத்தொழும் விதத்தைச் சேர்ந்தது ; கடவுளோ, நாம் கண்ணால் தரிசித்துக் கையால் தொட்டுணரக் கூடியவரல்ல. ஆகையால் வேதவிஷயங்களில் மனிதன் புத்தியால் கிரகிக்கக்கூடாதவைகள் சில எப்போதுமே இருந்துவரும் என்பதில் ஆச்சரியப்படக் காரணமில்லை. க்ஷேத்திரக்கணிதம் படிக்க விரும்புகிறவன், முதல் சூத்திரத்திலிருந்து ஆரம்பித்தால்தான், ஒன்றொன்றாய்ப் பழுதறச் சந்தேகங்கள் ஏற்படாமல் படித்துக்கொண்டு போகலாம். அதற்கு மாறாய், முந்தின சூத்திரங்கள் ஒன்றும் தெரியாமல், நின்ற நிலையில் கடைசிச் சூத்திரத்தை எடுத்துவைத்துக்கொண்டு, அதைக் கண்டுபிடிக்கப் பிரயாசப்படுவது வீண் அல்லவோ? இவ்விதமே, மெய்யான வேதத்தை அறியப் பிரயாசப்படுவதிலும், முதன்முதல் வேதம் யாது! அது போதிப்பது என்னவென்று கற்றபிறகு மாத்திரம், ஆக்ஷேபனைகளும் அவைகளுக்கான சமாதானங்களும் எவை என்று விசாரித்தால் அறிவு விர்த்தியாகும். அதற்கு மாறாய், உதாரணமாகத் தமதிரித்துவ பரம ரகசியம் கண்டுபிடிக்கமுடியாத காரியம் ; ஆகையால் அதைப்போதிக்கும் வேதம் தப்பறையென்று முடிப்பது புத்தியீனமாகும். அர்ச். தமதிரித்துவம் ஓர் பரமரகசியம். அதாவது, புத்தியைக்கொண்டு பூராய்க் கண்டுபிடிக்க இயலாத விஷயம்தான். ஆனால், கிரமமாய் ஆராய்ந்து பார்க்க விருப்பமுள்ளவனுக்கு, இது அவன் விசுவாசத்தைக் குறைக்கவுமாட்டாது, அழிக்

கவுமாட்டாது. அஃதெப்படியெனில், பின்வருமாறு யோசிக்க லாம். கடவுள் ஒருவர் உண்டல்லவோ—உண்டு; இவர் மனித னுக்குத் தம்மை எவ்விதமென்கினும் தெரிவிக்கக்கூடுமல்லோ—கூடும், அவர் தம்மைத்தாமே தெரிவிக்காதபடி தடுக்க எவராலும் கூடாது. இந்தக் கடவுள் தாமே, தாம் ஒருவராலும் ஆள்வகையில் மூவ ராயிருப்பதாகத் தெரிவித்திருந்தால், நாம் அதை ஏற்றுக்கொண்டு, தம்திரித்துவத்தைக் கண்டுபிடியாவிட்டாலும், அதுதான் உண்மை என்று ஒப்புக்கொள்வோமல்லோ—ஒப்புக்கொள்வோம்; ஏனெனில் கடவுள் பொய்சொல்லமாட்டார். ஆனால் கடவுள் மெய்யாகவே அவ்விதம் வெளிப்படுத்தினாரா? ஆம் என்கிறார்கள் சிலர், அல்ல என்கிறார்கள் மற்றோர். இது சரித்திர ஆராய்ச்சியைச் சேர்ந்தது. ஆகையால் மற்ற சரித்திர விஷயங்களைப்போல், இதையும் ஆராய்ந்து பார்க்கவேண்டியது. சரித்திரத்தால் நிரூபிக்கலாம். வெளிப்படுத் தினது உண்மை என்றறிந்தபின், அதைக் கண்டுபிடித்தால் என்ன, கண்டுபிடிக்காவிட்டால் என்ன? இவ்விதம் செய்வதற்குப் பதிலாக படிக்கத்தெரியாமல் படித்து வேதத்தின்மட்டில் உபேட்சையைத் தாமே உண்டாக்கிக்கொள்ளுகிறார்கள்.

இப்படியாகப் பற்பல முகாந்தரங்களினால் வேத உபேட்சை ஏற்பட்டு, "வேதம் என்னத்திற்கு? வேதம் இல்லை" என்று முடித்து விடுகிறார்கள். இவ்விதமான முடிவுக்குக் காரணமாயுள்ள வைகளை இதுவரை எடுத்துக்கூறினோம். இனி, இந்த முடிவு அதா வது வேதம் அவசரமில்லை—மனச்சாட்சிப் பிரகாரம் நடந்தால் போதும் என்று சொல்வது சரியாவென்று ஆராய்வோம்.

வேதத்தை அநுசரிப்பது ஏன்?

வேதம் ஆவது என்ன? கடவுள்மட்டில் நமக்குள்ள கட மைகளின் சங்கிரசம் வேதம் என்னப்படும். இக்கடமைகளை அநு சரிப்பதே, வேதத்தை அநுசரித்தலாகும். இக்கடமைகளில் முக் கியமானது, கடவுளைச் சகலத்துக்கும் அதிபதியும் ஆண்டவனுமாக ஆராதிப்பதே. வம்புக்கு வாதாடும் சில நாஸ்திகர் தவிர, மற்றயாவ ரும் கடவுள் ஒருவர் உண்டென்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். கட வுள் ஒருவர் உண்டென்றபோதே, வேதம் உண்டென்பதும் வெட்ட

வெளி. **வேதம் என்னத்திற்கென்றால்,** மனிதன் தன்னைப் படைத்த கடவுள் மட்டில் தனக்குள்ள கடமைகளை நிறைவேற்றவும், தனது கடைசிக்கதியாகிய பூரண பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாகவுந்தான்.

வேதமின்றி, இவைகளை அநுசரிக்க முடியாதா? முடியாது. ஏனெனில், வேதமின்றி அறநெறி மார்க்கமில்லை. வேதமில்லாத அறம், மரத்தினின்று அறுபட்ட கிளைக்குச் சமானம். அறுபட்ட கிளையானது சிற்சில சமயங்களில், ஏதோ ஓர் விசேஷ காரணத்தால் உலர்ந்துபோகாமல் பச்சையாயிருக்கக்கூடும்; ஆனால் உயிருள்ளதா யிருக்கமுடியாது. மெய்யான அறநெறி மார்க்கத்தைப் போதிப்பதற்கும் அதை அநுசரிப்பதற்கும் வேதமில்லாமல் சாத்தியப்படாது.

மனச்சாட்சியின் பிரகாரம் நடந்தால் போதாதா?. ஒவ்வொருவனும் தன் மனச்சாட்சியின் பிரகாரம் நடக்கக்கடவான். ஆனால் கடவுள் ஒருவர் உண்டு, அவருக்குக் கீழ்ப்படியவேணும், அல்லாவிடில் தண்டனைக்கு ஆளாவோம் என்கிற பயமிருந்தால் மாத்திரம் மனச்சாட்சிப் பிரகாரம் நடப்போம். இந்த உணர்ச்சியோடு மனச்சாட்சிப் பிரகாரம் நடப்பதே வேதத்தை அநுசரித்தல் என்னப்படும். அதாவது, கடவுள் இதைக் கற்பித்திருக்கிறார், அந்த விலக்கியிருக்கிறார் என்று அறிந்து நடக்கவேண்டும். இவ்விதம் கற்பிக்கப்பட்டவைகளில் கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட வேதத்தை அநுசரிக்கவேண்டும் என்பது ஒன்று. இஃதன்றி, "அவனவன் தன்தன் மனச்சாட்சி சொல்வதுபோல் நடப்பது போதுமானது. கடவுள் சகலருக்கும் கட்டளையிட்டிருக்கிற கடமைகள் என்னவென்று அறியத் தேவையில்லை" என்றால் உலகத்தில் ஒழுங்கும் இருக்காது, அறநெறியும் கிடையாது. கடவுள் நன்மையும் தின்மையும் ஏககாலத்தில் தாமே கட்டளையிட்டிருக்கிறார் என்று சொல்லவேண்டியதாகும். ஏனெனில், ஒருவனுக்கு நன்மையாகத் தோன்றுவது, இன்னொருவனுக்குப் பொல்லாப்பாகத் தோன்றும். ஒருவன் புத்திக்கு அடாத காரியமாகத் தோன்றுவது, இன்னொருவனுக்குச் செய்யத்தக்க விஷயமாகத் தோன்றும். அப்போ, அதுவும் சரி இதுவும் சரி. 'கடவுளது கற்பனையில்லாதேபோனால், அவன

வன் நினைத்ததே சட்டமாகும். மீளவும் வேதத்தை அநுசரியாதீ வன், மறு ஜீவியத்தைப்பற்றி நினைப்பதில்லை. மறுஜீவியம் இல்லாதேபோனுல், புண்ணியங்களைச் செய்வானேன்?

இது நிற்க, வேதத்தை அநுசரியாதவன் தகுந்ததைச் செய்து, தகாததை விலக்கவும் முடியாது. ஏனெனில், வேத உணர்ச்சி இல்லாதவனுடைய மனச்சாட்சி வெகு மந்தமுள்ளதாகி விடும். நரபக்ஷணி ஒருவன் இருக்கிறுன். அவனைக் கந்தன் என்றழைப்போம். கந்தன் நல்ல வாலிபன். அவனுக்கு ஒருநாள் பசி மேலிட்டது. பக்கத்தில் அவன் தாய் இருக்கிறுள். தன் தாயைத் தின்றுல் பசி தீரும், நல்ல உணவாகும் என்று நினைக்கிறுன். அவன் வாய் ஊருகிறது. தாயானவள் அவனைத் தன் உதரத்தில் தரித்தாள்; பெற்று வளர்த்துப் பாலூட்டித் தாலாட்டி ஆதரித்தாள். இப்போ அவன் பிராயமாகி வாலிபனுயிருக்கிறுன். தாயுடைய பராமரிப்பு அவனுக்குத் தேவையில்லை. ஆகையால், ஏன் யோசிக்கவேணும்? அவளைப் பட்சித்துத் தின்கிறுன், அவன் மனச்சாட்சி ஒன்றும் சொல்லவில்லையா?

இரண்டுபேர் பணம் சம்பாதிப்பதற்காக, அமேரிக்காவுக்குப் போனுர்கள். இருவரும் உற்ற சிநேகிதர், இணைபிரியாததோழர். ஏராளமான திரவியம் சம்பாதித்தபின், தங்கள் ஜென்ம நாட்டுக்குத் திரும்பினுர்கள். ஓர்நாள் இராத்திரி, இருவரில் ஒருவன் தன் தோழனுடைய படுக்கையின் கிட்டப்போய், அவன் கழுத்தில் கத்தியை வைத்து, "சிநேகிதா, நீ சாகவேணும், உன் பணம் எனக்குத்தேவை" என்பதாகச் சொன்னுன். மற்றவன் தன் உயிரையாவது விட்டுவிடும்படித் தன்னுலியன்றமட்டும் இரந்து மன்றுடிப்பார்த்தான். பிரயோசனமில்லை. "எனக்கு ஆஸ்தியின்மேல் ஆசை, திரண்ட ஐசுவரியவனுக விருப்பம். இதற்காக உன் பணம் எனக்கு வேணும். பயமில்லாமல் உன் பணத்தைப்பிடுங்குவதற்காக உன் உயிரை மாய்ப்பது அவசரம்" என்ற பதில்தான் கிடைத்தது. படுக்கையிலிருந்தவன் அபயசத்தமிட்டு, ஆ! பாவி! கடவுள் உன்னைத் தண்டிப்பார் என்றுன். மற்றவனே, "கடவுளா, அவரைப்பற்றி எனக்குக்காரியமில்லை. அவருக்கும் என்னைப்பற்றிக்காரியமில்லை என்று நினைக்கிறேன். எனக்குக் கடவுள் என் சொந்தலாபமும், சுகமுந்தான்,

இந்தக் கடவுள், ஒன்றையும் விலக்குவதில்லை. ஆகையால், சலாம்! போ" என்று சொல்லிக் கத்தியால் தன் நண்பனின் கழுத்தை அறுத்துப் போட்டான். இவன் மனச்சாட்சி எங்கே போயிற்று?

கந்தனும், பணப்பேய் பிடித்த சிநேகிதனும் மனச்சாட்சிக்கு விரோதமாய் நடந்தார்கள். ஆனால், எங்கள் மனச்சாட்சிக்குப் பங்கமின்றிக் கடவுள் கற்பனையை அநுசரிப்போம். எந்த வேதமும் அதற்கு அவசரம் இல்லை என்பார்கள் சிலர். அதாவது, மோட்சத்துக்குப் போவதற்கு, எந்த வேதத்தையும் அநுசரியாமல், கற்பனைப் பிரகாரம் நடந்தால் போதும் என்பார்கள். இதற்கு மறுமொழி :— மனுஷன் பலவீனன். வேத அநுசரணையின்றிக் கற்பனைகளை அநுசரிப்பது அசாத்தியம். இதற்கு உலக அநுபவமே அத்தாட்சி. உலகத்தில் பற்பல விதமான அக்கிரமங்களுக்கும் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள் யார்? வேதத்தை அநுசரியாதவர்கள்தான். வேதப்பற்றுதலுள்ளவன், எந்தக்கற்பனையையும் மீறப் பயப்படுவான். தவறித் தப்பிதம்செய்தாலும், தன் குற்றத்தை உணர்ந்து மீண்டும் நல்லவழியில் நடக்க முயற்சிப்பான். வேத உபேட்சையுள்ளவனோ, அப்படியல்ல. அவன் குற்றம் அவனைக்குத்தாது. ஏனெனில் மீறுபவர்களைக் கடவுள் தண்டிப்பார் என்கிற பயம், கற்பனைகளைப் பிரமாணிக்கமாய் அநுசரிப்பதற்கு அவசரமாய் வேண்டியது. இந்தத் தெய்வபயம் நம்மிடத்தில் எப்போதும் நிலையூன்றி இருக்கவேணுமானால், வேதத்தை அநுசரியாமல் முடியாது.

மீளவும், எந்த வேதத்தையும் அநுசரிப்பது அவசரமில்லை; கற்பனைப்பிரகாரம் நடந்தால் போதும் என்பது, தன்னிலேயே முரண்பாடான கொள்கை. ஆம் என்றும் அல்லவென்றும் ஏக காலத்தில் சொல்வதுபோலாகும். ஏனெனில், கற்பனைகளில் முதன்மையான கற்பனை, கடவுளால் அருளப்பட்ட வேதத்தை அநுசரிக்கவேணும் என்பதாயிருக்கக்கொள்ள, வேதத்தை அநுசரிக்கமாட்டேன், கற்பனைப்பிரகாரம் நடப்பேன் என்றால் எப்படியாகும்? நீ மெய்யாகவே கற்பனைகளை அநுசரிக்கிறவன் என்று சொல்லிக்கொள்ளவேணுமானால், வேதத்தை அநுசரித்தால்தான் ஆகும். அல்லாவிட்டால், கற்பனையை அநுசரிப்பது அவசரம் என்றும், அநுசரிப்பது அவசரம் இல்லை என்றும், ஒரே மூச்சில் சொல்லிக்கொள்ளும் பித்தலாட்டக்

க்காரன் என்று உன்னைச் சொல்லவேண்டியதாகும். இது தவிர, மேற்கூறின இரண்டு உதாரணங்களிலும் அதாவது கந்தனும் பணப் பேய் பிடித்த சிநேகிதனும் மனச்சாட்சிக்கு விரோதமாய் நடந்தார்கள் என்று சொல்வது மாத்திரம் போதாது. மனச்சாட்சிக்கு மீறுதலாய் நடப்பதற்குக்காரணம் என்னவென்று உணரவேண்டும்: அவர்கள் இருவரும் தெய்வ பயமின்றி, வேதத்தை அலட்சியம் செய்து வந்ததே சுபாவத்துக்கு அடாத அக்கிரமங்களைச்செய்வதற்குக் காரணமாயிற்று.

கடவுள்மட்டில் நமக்குள்ள கடமைகள்.

இன்னும் ஓர் கேள்விக்குப் பதில் சொல்லவேண்டியதிருக்கிறது. வேதம் என்னத்திற்கென்றால், கடவுள் மட்டில் நமக்குள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு என்று சொன்னோம். ஆனால் கடவுள்மட்டில் நமக்குக் கடமைகள் இருப்பானேன் என்று வேத உபேட்சையுள்ள சிலர் கேட்கலாம். உன்னைத் தன் உதரத்தில் ஒன்பது மாதம் சுமந்து, பெற்றெடுத்துப் பாலூட்டி வளர்த்த தாய்க்கும் உன்னைப் போஷிக்கும்படியாகவும், உன்னைப் படிக்கவைத்து நீ ஆளானபின், நல்ல பதவியிலிருப்பதற்காகவும் இரவு பகல் என்று பாராமல் கஷ்டப்பட்டு உழைத்த தகப்பனுக்கும் நீ நன்றிபாராட்டக் கடமை இல்லை என்பாயோ? இல்லையென்று சொல்லமாட்டாய். ஆகிலும் உன் தாய் தந்தையர் உன் சரீரத்தை உனக்குக் கொடுப்பதற்கு மாத்திரம் அணைக்காரணமாயிருந்தார்கள். உன் ஆத்துமத்தையும் அதன் தத்துவங்களையும் மற்ற யாவையும் உனக்குத் தந்த ஆதிகாரண கர்த்தனாகிய கடவுள் மட்டில் உனக்கு யாதொரு கடமையுமில்லையென்று எவ்விதம் சொல்லக்கூடும்? கடவுள் நம்மேல் இக்கடமைகளைச் சுமத்தாமல் விட்டுவிடக் கூடாதாவென்றால், கூடாது என்றே சொல்லவேண்டும். ஏனெனில் நாம் சிருஷ்டிகளானமட்டும், கடவுளுக்குக் கடமைப்பட்டுள்ளோம். நாம் கடமைப்பட்டிரா விட்டால், நாம் சிருஷ்டிகள் என்றும், கடவுள் சிருஷ்டிகர் என்றும் சொல்லத்தகாது. இருபேருக்குமுள்ள சம்பந்தமே இக்கடமையை ஏற்படுத்துகிறது. என் பெற்றோர்மட்டிலும், கடவுள் மட்டிலும் எனக்கு யாதொரு கடமை இல்லை. என்னை ஏன் உண்டாக்கினார்கள்

நான் அவர்களைக் கேட்டேனா? தங்கள் இஷ்டத்தைப் பொறுத்துத் தங்களுடைய பிரியத்துக்காக என்னை உருவாக்கினார்கள். என் நன்மையைக் கோரி என்னைச் சிருஷ்டிக்கவில்லை என்பதாக ஒருவன் சொல்கிறான். இது நியாயமாகுமா? நான் உனக்கு ரூ: 100, இனாமாகக் கொடுக்கிறேன். இந்தப்பணம் உனக்கு ஓர் நன்கொடை. ஆனால், இந்தப்பணம் தானே உன் உயிருக்கு மோசம் வரவும் (திருடர்கள் உன்னிடமிருந்து அதை அபகரித்துக்கொள்ளும்படி உன்னைக் கொல்லத் தேடினால்) அல்லது நீ துராகிர்தமாய் நடக்கவும் வழியாகலாம். இப்படி இந்தப்பணத்தால் மோசம் நேரிடக்கூடும் என்பதைப்பற்றி, நான் உனக்குச் செய்தது தின்மையாகுமா? அல்லது நீ எனக்குக் கடமைப்பட்டவனல்ல என்பது நியாயமாகுமா? இல்லையே; அதுபோலவே உனது உயிரைப்பற்றியும் சொல்லலாம். சிலர் பிறவாதிருந்தால், அவர்களுக்கு உத்தமமாயிருக்கும் என்பது மெய். ஆனால் அவர்களுக்கு வந்த மோசம், அவர்கள் பிறந்ததினாலல்ல, அவர்களுக்கு உயிரைக் கொடுத்ததினாலல்ல. கிடைத்த உயிரைச் சரியாய் உபயோகியாமல் அவப்பிரயோகம் செய்ததால் மோசம் நேரிட்டது.

கடவுள் என்னைச் சிருஷ்டியாமல் விட்டிருக்கலாமே? சிருஷ்டியாமலிருந்திருக்கலாம். அது அவருடைய இஷ்டம். அவருடைய உரிமை **சுதந்தரம்** அது. உன்னைச் சிருஷ்டிக்க இஷ்டப்பட்டார். நீ, சொல்லவேண்டியதென்ன? என்னைக்கேட்காமல் தன் இஷ்டம்போல் என்னை உண்டாக்கினபிறகு, நான் அவர் சொற்படி கேட்கவில்லையென்று என்னைத் தண்டிப்பது அநியாயமல்லவா? இதிலொன்றும் அநியாயமில்லை. சொற்படி கேளாதவனைத் தண்டிப்பது நியாயம் என்று எவனும் ஒத்துக்கொள்ளவேண்டியது. உன்னைக் கேட்காமல் உன்னைச் சிருஷ்டித்தது அநியாயம் என்பாயோ? இன்னொருவனுடைய **உரிமையை அழிப்பது**தான் அநியாயம் என்னப்படும். நீ **ஒன்றும்** இல்லாதபோது, கடவுள் உன்னை உருவாக்கினார். உன்னை உண்டாக்குமுன் உனக்கு ஒரு உரிமையும் இருந்ததில்லையே; ஆகையால், உன்னை உண்டாக்கினதினால், உன் உரிமையை அழித்தாரோ? **நீயே இல்லை.** உனக்கு உரிமை எங்கே இருந்து வந்தது? மேலும் கடவுள் உன் நன்மையைக் கோரி உன்னை

148026

உண்டாக்கினார். நீ மறு உலகில் பூரண பாக்கியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படியாக உன்னை உருவாக்கினார். ஆகையால் அவருக்கு நீ நன்றிபாராட்டவேண்டுமேயல்லாது, அவர்பேரில் குறை கூறுவது அக்கிரமமாகும்.

இன்னும் **வேதம் என்னத்திற்**கென்றால், இவ்வுலகில்தானே மனிதன் மனச்சந்தோஷமுள்ளவனாயிருப்பதற்கு வேதம் அவசரம். வேத உபேட்சையுள்ளவன் இவ்வுலகிலேயே நிர்ப்பாக்கியனாயிருக்கிறான். சகலத்தையும்பற்றிச் சந்தேகம்கொண்டு, அறியாமை என்னும் ஆழியில் அமிழ்ந்தினவனாய், இவ்வுலக ஜீவியத்தின்போது நேரிடும் விக்கினங்களும் அசந்தர்ப்பங்களும் எதற்காக என்று அறிவதில்லை. இன்பத்தை நாடுவதொன்றே அவனுக்குத் தெரிந்தது. ஆனால் இன் த்துக்குப் பதிலாக, பற்பல சமயங்களில் துன்பந்தான் சம்பவிக்கிறது. பண நஷ்டம், வியாதி, பகை, காய்மகாரம், துரோகம் இவை முதலான துன்பங்களில் உழன்று வருந்துகிறான். தனது சுகத்தைத்தவிர, வேறொரு மேலான எண்ணமும் இல்லாதது பற்றிப் பிறர் தன்னிலும் ஆஸ்திக்காரர், சுகவாளர், செல்வாக்குள்ளவர்களாயிருப்பதைக் காணும்போது, தாங்கொண்ணாத் துயரம் அநுபவிக்கிறான். தன் மனமே தன்னை வாதித்துத் தவிக்கிறான். யாதொரு தேறுதலும் காண்பதில்லை. மனிதனுடைய ஆசைக்கோ அளவில்லை. எத்தாலும் திர்ப்தி அடையா இருதயமுள்ளவன் மனிதன். சகல சிருஷ்டிகளையும் நோக்கி, என்னைப் பாக்கியவானாக்குங்கள் என்று கேட்கிறான். இன்னொருவனுடைய சிநேகத்தில் தன் சுகத்தைத்தேடி, அந்தச் சிநேகம் வஞ்சனை நிறைந்த கபடென்று கண்டுணர்கிறான். இந்திரியங்களின் இன்பத்தை நாடி எவ்வளவுக்கு அவைகளின் இன்பத்தைச் சுகிக்கிறானோ, அவ்வளவுக்கு அதிகமதிகமாய் ஆசை கிளம்பி அதை அடக்கக்கூடாமல் திகைத்து மனம் வருந்துகிறான். பணத்தைச் சம்பாதித்துச் சுகத்தை அடைய விரும்பினாலோ, அதிலும் சுகத்தைக் கண்டபாடில்லை. ஏனெனில் தன் ஆசைப்பிரகாரம் பணம் குவிந்தாலும் நாளுக்கு நாள் பேராசைதான் மேலிடுகிறது. எதாவது பொருள்நஷ்டம் ஏற்பட்டால் மனக்கிலேசப்பட்டு அவநம்பிக்கைக்கு ஆளாகிறான். பேர், பெருமை, கீர்த்தி இவைகளினாலும் மனதுக்குத் திர்ப்தியைக் கண்டடைவ

தில்லை. மனிதன் கடவுள் சாயலாக உண்டாக்கப்பட்டவன். மெ
மேலும் அவர் பாரிசமாய் நாடிச்செல்வதால் மாத்திரம் மனி
பாக்கியவானாகக்கூடும். இதற்கு உலக அனுபவமே அத்தா
வேதப்பற்றுதல் இல்லாத எவனும் மெய்யாகவே மனச் சந்தே
முள்ளவனாயிருப்பது அசாத்தியம். இதற்குமாறாய் எவன் தன
நேரிடும் துன்ப துரிதங்களில் கடவுளைத் தியானித்து சுபாவத்
மேலான எண்ணத்துடன் நடப்பானோ; அதாவது வேத அறவ்
னத்தில் தன் ஆறுதலைத் தேடுவானோ; அவன் ஆஸ்திபாஸ்தி ம
மை சலாக்கியம் அடையாதேபோனாலும், நிச்சயமாகவே ம
சந்தோஷமுள்ளவனாயிருப்பான்.

Printed by Rev. Br. Joseph, s.j. Superintendent,
St. Joseph's Industrial School Press, Trichinopoly.